**ஜூலை – 26**

# TNPSC துளிகள்

- பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவையானது (Cabinet Committee on Economic Affairs - CCEA) 40 இலட்ச மெட்ரிக் டன் அளவிலான சர்க்கரையை இருப்பு வைப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் 2020 ஆம் ஆண்டு ஜூலை 31 வரையிலான 1 ஆண்டு காலத்திற்கு சர்க்கரை இருப்பு வைக்கப் படவிருக்கின்றது.
- வீரப்ப மொய்லி தலைமையிலான நிதிக்கான நிலைக் குழுவானது "நாட்டிற்கு உள்ளே மற்றும் நாட்டிற்கு வெளியே ஆகிய இரண்டிலும் கணக்கில் காட்டப்படாத வருமானம்/சொத்தின் நிலை: ஒரு விமர்சனக் கருத்தாய்வு" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
    - இது 1980 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான பல்வேறு காலகட்டத்தில் இந்தியர்களால் கணக்கில் காட்டப்படாத சொத்தின் கணிக்கப்பட்ட மதிப்பு 216.48 பில்லியன் டாலரிலிருந்து 490 பில்லியன் டாலர் வரை இருக்கும் என்று கூறுகின்றது.
- மத்தியத் தொழில் பாதுகாப்புப் படையானது (CISF - Central Industrial Security Force) பாதுகாப்புக் களஞ்சியம் என்ற ஒரு நிகழ்நேர கலைக் களஞ்சியத்தையும் தனது வீரர்களுக்காக "CISFtube" என்ற ஒரு காணொலி இடைமுகத்தையும் தொடங்கியுள்ளது.
    - CISF ஆனது ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் தொழில்நுட்ப அறிவை தனது வீரர்களுக்கு கிடைக்கச் செய்து அதன் மூலம் தனது வீரர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம்

- தமிழ்நாடு சட்டசபையானது, மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 6-லிருந்து 9 ஆக உயர்த்துவதற்கான மசோதாவை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்த எண்ணிக்கையானது தலைவரைத் தவிர்த்து மற்ற உறுப்பினர்களைக் குறிக்கும்.
- "மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் சிறுபான்மையினர் நலம்" ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டைச் சேர்ந்த புதிய மாநிலங்களவை உறுப்பினர்கள்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மாநிலங்களவை உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- வைகோ, அன்புமணி ராமதாஸ், அஇஅதிமுகவைச் சேர்ந்த A. முகமது ஜான்,

மற்றும் N. சந்திரசேகரன், திமுகவைச் சேர்ந்த N. சண்முகம், மற்றும் P. வில்சன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# தேசியச் செய்திகள்

## தேசியத் தரவுத் தர மன்றம்

- தரவு சேகரிப்பு மற்றும் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக இந்திய மருத்துவ ஆராய்ச்சி ஆணையம் (ICMR - Indian Council of Medical Research) தேசிய தரவுத் தர மன்றத்தை (National Data Quality Forum - NDQF) ஏற்படுத்தியுள்ளது.
- NDQF ஆனது அறிவியல்சார் தகவல் மற்றும் ஆதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்புகள் ஆகியவற்றிலிருந்து கற்றவற்றை ஒருங்கிணைக்கும்.
- இது அவ்வப்போது பயிலரங்கங்கள் மற்றும் மாநாடுகள் மூலம் செயல்களை வழி நடத்தும்.

## ஆதார விலை - கரும்பு

- 2019 – 20 ஆம் ஆண்டு கரும்புப் பருவத்திற்கான சர்க்கரை ஆலைகளால் வழங்கப்படும் கரும்பிற்கான “ஆதார மற்றும் லாபகரமான விலை” (Fair and Remunerative Price - FRP) நிர்ணயத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- FRP என்பது விவசாயிகளிடமிருந்து சர்க்கரை ஆலைகளால் வாங்கப்படும் கரும்பிற்கான குறைந்தபட்ச விலையாகும்.
- இது விவசாயப் பொருட்கள் மற்றும் விலைகளுக்கான ஆணையத்தின் (Commission for Agricultural Costs and Prices - CACP) பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசினால் நிர்ணயிக்கப்படுகின்றது.
- FRP-ஐத் தவிர, பஞ்சாப், ஹரியானா, உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் FRP-ஐ விட பொதுவாக அதிகமாக இருக்கும் ஒரு மாநில ஆலோசனை விலையை அறிவித்துள்ளன.

## இந்தியாவில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

- 2019 ஆம் ஆண்டின் சர்வதேசப் புத்தாக்கக் குறியீடு வெளியிடுதலின் போது இந்தியாவின் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி செலவினச் சூழல் அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக ஒரு சிறப்புக் கூட்டம் புது தில்லியில் நடத்தப் பட்டது.
- இந்த அறிக்கையானது பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழுவினால் தொகுக்கப்பட்டது.
- இந்திய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6% முதல் 0.7% வரையிலான மிகக் குறைந்த அளவிலேயே இந்தியா முதலீடு செய்கின்றது.
- அமெரிக்கா (2.8), சீனா (2.1), இஸ்ரேல் (4.3) மற்றும் கொரியா (4.2) போன்ற நாடுகளின் செலவினங்களை விட இது குறைவானதாகும்.

## வங்கி தேசியமயமாக்கல் – 50 ஆண்டுகள்

- 1969 ஆம் ஆண்டு ஜூலை 19 அன்று வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதின் 50வது ஆண்டை இந்தியா அனுசரிக்கின்றது.
- அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கடனளிக்கும் முக்கியமான 14 வங்கிகள் தேசிய மயமாக்கத்தைத் தொடங்கி வைத்தார். நாட்டில் உள்ள மொத்த வங்கி வைப்பு நிதியில் 85 சதவிகித வைப்பு நிதியை இந்த வங்கிகள் கொண்டுள்ளன.
- வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல் மற்றும் பொதுத் துறைப் பரிமாற்றம்) அவசரச் சட்டம், 1969-ன் கீழ் இந்த வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. இந்த அவசரச் சட்டம் பின்னர் மசோதாவாக மாறியது.
- பின்னர் 1980 ஆம் ஆண்டில் மேலும் 6 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன.
- பெரிய வணிகங்கள் கடன் வழங்குதலில் ஆதிக்கம் செலுத்திய அந்த நேரத்தில் முன்னுரிமைத் துறைகளை ஊக்கப்படுத்துவது என்பது தேசியமயமாக்கலின் முக்கியக் குறிக்கோளாகும்.
- இந்தியாவில் மிகப்பெரிய கடனளிக்கும் வங்கி பாரத ஸ்டேட் வங்கியாகும்.



THE TIMES OF INDIA

14 TOP BANKS ARE NATIONALISED

Ordinance follows unanimous Cabinet decision

Kamaraj, Chavan happy

'Syndicate' in disarray as Morarji goes

Nationalised banks

Assam flood worsens: heavy havoc

## பாதுகாப்பு முகப்புப் பலகை

- பாதுகாப்புத் துறை அமைச்சர் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள பாதுகாப்பு உற்பத்தித் துறையின் (Department Defence Production - DDP) முகப்புப் பலகையை வெளியிட்டுள்ளார்.
- இந்த முகப்புப் பலகையானது பாதுகாப்பு தொடர்பான ஏற்றுமதிப் பொருட்கள், பாதுகாப்பு தொடர்பான இழப்பீடுகள், அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் ரக்சா கியான் சக்தித் திட்டம் உள்ளிட்ட முக்கியமான பாதுகாப்பு உற்பத்திக் கூறுகளைக் கண்காணிப்பதற்குப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்திற்கு உதவும்.
- இந்த முகப்புப் பலகை பொது மக்களுக்காக “ddpdashboard.gov.in” என்ற இணையதளத்தில் இருக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## பார்ச்சூனின் சர்வதேச 500

- பார்ச்சூனின் சர்வதேச 500 என்ற பட்டியலில் முன்னிலையில் உள்ள இந்திய நிறுவனம் முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனமாகும்.
- இந்த ஆண்டில் இது 42 இடங்கள் முன்னேறி 106-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் இந்திய எண்ணெய் நிறுவனமும் உள்ளது.
- பார்ச்சூன் சர்வதேச 500 என்பது வருமானத்தால் கணக்கிடப்பட்ட உலகில் முன்னிலையில் உள்ள 500 நிறுவனங்களின் வருடாந்திரத் தரவரிசையாகும்.
- இந்தப் பட்டியலானது ஒவ்வொரு வருடமும் பார்ச்சூன் பத்திரிக்கை என்ற ஒரு அமெரிக்க பன்னாட்டு வணிகப் பத்திரிக்கையினால் தொகுக்கப்பட்டு, வெளியிடப்படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மனித – யானைகள் மோதல்கள்

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சசகத்தினால் அமைக்கப்பட்ட ஒரு குழுவானது யானைகள் மின்சாரத்தினால் பாதிக்கப்படுவதிலிருந்துத் தடுத்து நிறுத்தப் படுவதற்கு மின் கம்பங்களின் உயரங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.
- காட்டுப் பகுதிகளில் ஏபிசி அல்லது நிலத்தடி கேபிள்களைப் பயன்படுத்துமாறு மின் விநியோக நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- 2009 – 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஏறத்தாழ 461 யானைகள் மின்சாரம் தாக்கி (ஆண்டுக்கு 50) உயிரிழந்துள்ளன.



## செதில் பாத நத்தை

- ஆழ் கடல் சுரங்க வேலையின் பாதிப்பின் காரணமாக “செதில் பாத நத்தை” என்ற ஒரு

அரிய வகை நத்தை இனம் "அச்சுறுத்தப்பட்ட இனமாக" அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட முதலாவது இனமாக உருவெடுத்து இருக்கின்றது.

- இது மடகாஸ்கருக்கு அருகில் இந்தியப் பெருங்கடலின் நிலப்பரப்பில் மூன்று இடங்களில் மட்டுமே காணப்படுகின்றது.
- இது 2019 ஆம் ஆண்டு ஜூலை 18 அன்று தனது திருத்தப்பட்ட சிவப்புப் பட்டியலில் "அருகி வரும் இனமாக" சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தினால் (International Union for Conservation of Nature - IUCN) சேர்க்கப்பட்டது.
- தற்பொழுது உலகளவில் அனைத்து கடற்பரப்பு சுரங்க நடவடிக்கைகளிலும் முடக்கம் காணப்படுகின்றது.
- ஐக்கிய நாடுகளின் சர்வதேச கடற்பரப்பு ஆணையமானது கடற்பரப்பு சுரங்கத் தொழிலை எவ்வாறு நடத்த வேண்டும் என்பது குறித்த வழிகாட்டுதல்களை தற்பொழுது தயாரித்துக் கொண்டிருக்கின்றது.

## மேற்கூரை சூரிய ஒளித் திட்டங்கள்

- 2022 ஆம் ஆண்டில் 40,000 மெகா வாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய ஒளித் திட்டங்களை அமைக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியின்படி, இந்தியாவில் 1700 மெகா வாட் திறன் கொண்ட கம்பியினால் இணைக்கப்பட்ட மேற்கூரை சூரிய ஒளி அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.
- மேற்கூரை சூரிய ஒளித் திட்டங்களை அமைத்ததில் முன்னிலையில் இருக்கும் 3 மாநிலங்கள் : குஜராத், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு.

## மேற்குத் தொடர்ச்சி மலை – பச்சைப் பாம்பு

- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் "புரோகத்துல்லா ஆண்டிகுலா" என்ற ஒரு புதிய பச்சைப் பாம்பு இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.



- இது மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதியில் மட்டுமே காணப்படும் ஒரு பழமையான இனமாகும்.

- இது 26 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒலிகோசின் காலத்தின் போது உருவாகியதாகக் கருதப் படுகின்றது.
- மெல்லிய உடல் மற்றும் தாவரம் போன்ற தோற்றத்தின் காரணமாக இப்பாம்புகள் இப்பெயரைப் பெறுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## நிஷாகாந்தி சங்கீத புரஸ்கரம்

- கேரள அரசு இசைக் கலைஞர்களான பாராசாலா B. பொன்னம்மாள் மற்றும் T.V. கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு நிஷாகாந்தி சங்கீத புரஸ்கரம் விருதை வழங்கியுள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் கேரள சுற்றுலாத் துறையினால் ஒருங்கிணைக்கப்பட்ட கலாச்சாரத் திட்டத்தினால் வழங்கப்படுகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## பெல்ப்ஸின் சாதனையை கிறிஸ்டோப் மிலக் முறியடித்தார்

- சிறந்த நீச்சல் வீரரான மைக்கேல் பெல்ப்ஸ் வைத்திருந்த 10 ஆண்டு கால உலகச் சாதனையை ஹங்கேரியாவைச் சேர்ந்த இளம் நீச்சல் வீரரான கிறிஸ்டோப் மிலக் என்பவர் முறியடித்தார்.




- தென் கொரியாவில் நடைபெற்ற உலக நீச்சல் சாம்பியன்ஷிப்பில் இவர் 200 மீட்டர் பட்டர்பிளை இறுதிச் சுற்றில் 1:50.73 வினாடியில் (1 நிமிடம் 50.73 வினாடிகள்) வெற்றி பெற்றுள்ளார்.
- இதன்படி இதற்கு முந்தைய பெல்ப்ஸின் உலக சாதனையை விட 0.78 வினாடியில் இவர் முன்னிலையில் உள்ளார்.

## இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் கூட்டமைப்பு (ICA - Indian Cricketers Association)

- பிசிசிஐ ஆனது இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் கூட்டமைப்பிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ICA ஆனது சர்வதேசக் கிரிக்கெட் வீரர்கள் கூட்டமைப்பு மன்றத்துடன் இணைக்கப் படவில்லை. இது முன்னாள் ஆண்கள் மற்றும் மகளிர் கிரிக்கெட் வீரர்களை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கும்.



- இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான கபில் தேவ், அஜித் அகர்கர் மற்றும் சாந்தா ரங்கசாமி ஆகியோர் ICA-ன் இயக்குநர்கள் ஆவர்.

---------------